இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“அங்கே கூடியிருந்தவர்கள் அவரிடம், “ஆண்டவரே, இஸ்ரயேலுக்கு ஆட்சியுரிமையை மீண்டும் பெற்றுத் தரும் காலம் இதுதானோ?” என்று கேட்டார்கள். அதற்கு அவர், “என் தந்தை தம் அதிகாரத்தால் குறித்துவைத்துள்ள நேரங்களையும் காலங்களையும் அறிவது உங்களுக்கு உரியது அல்ல; ஆனால் தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்” என்றார். (திப 1:6-8)

# சினோடலிட்டி எனும் ஒருங்கிணைந்த பயணத்தை ஊக்குவிக்க வேண்டும்

## கர்தினால் பிலிப்பு நேரி வலியுறுத்து

**வத்திக்கான்:** திருஅவையைச் சார்ந்த அனைவரும் புரிந்து கொள்ளப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும், பாராட்டப்பட வேண்டும் என்ற ஆழமான விருப்பத்தை ஒருங்கிணைந்த பயணத் (சினோடலிட்டி) திருஅவை உறுதிசெய்கின்றது என்று கூறியுள்ளார் கர்தினால் பிலிப்பு நேரி ஃபெராவோ.

கடந்த மே 07 ஞாயிற்றுக்கிழமை முதல் 08 செவ்வாய்க்கிழமை வரை பெங்களூரில் உள்ள புனித யோவான் தேசிய அறிவியல் நிறுவனத்தில் நடைபெற்ற, இந்திய இலத்தீன் வழிபாட்டுமுறை கத்தோலிக்க ஆயர் பேரவை (CCBI-யின் முக்கிய செயல்பாடுகளைத் திட்டமிடுவதற்கான தேசிய அளவிலான கருத்தரங்கின் தொடக்க விழாவில் இவ்வாறு கூறினார் கோவா மற்றும் டாமன் உயர் மறைமாவட்டத்தின் பேராயரும் CCBI-யின் தலைவரான கர்தினால் பிலிப்நேரி ஃபெராவோ.

ஆயர்கள் மற்றும் அருள்பணியாளர்கள் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் ஒருங்கிணைந்த பயணத் திருஅவையை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க அழைப்பு விடுத்த கர்தினால் ஃபெராவோ அவர்கள், சினோடலிட்டி என்பது ஒன்றிணைந்த ஒரு பயணம் மற்றும் பகுத்தறிவுடன் கூடிய பயணம் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

"சினோடல் லீடர்ஷிப்" அல்லது ஒருங்கிணைந்த பயண திருஅவையின் தலைமைத்துவம் என்பது திருஅவையில் தற்போதைய தலைமைத்துவத்தின் புதிய மாதிரிக்கு அழைப்புவிடுக்கின்றது என்றும், இது புரிந்து கொள்ளப்படவும், மதிக்கப்படவும் வேண்டும் என்ற ஆழமான விருப்பத்தை உறுதி செய்கின்றது என்றும் கூறியுள்ளார் கர்தினால். இறைவனின் பணியை அதிக ஆர்வத்துடன் முன்னெடுத்துச் செல்வதில் பொதுநிலையினர், அருள்பணியாளர்கள் ஆகியோரின் மன உறுதியையும் ஈடுபாட்டையும் உயர்த்தும் ஓர் உயர்மட்டத்திற்கு, சினோடல் கலாச்சாரத்தை எடுத்துச் செல்வதை நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார் கர்தினால் பிலிப்பு நேரி.

இரண்டு நாள் நடைபெற்ற இக்கருத்தரங்கில் CCBI பேரவைத் தலைவர்கள், நிர்வாகிகள், பல்வேறு துறைகளின் தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

*மெரினா ராஜ் – வத்திக்கான்*



**இரண்டு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்கள்**

# பண்பாட்டிற்கு ஏற்ப நற்செய்திப்பணி மாற வேண்டும்

உலகளவில் மாறிவரும் பண்பாட்டிற்குள் நுழைவது, வரலாற்றை உருவாக்குவது ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு தலத்திருஅவை தனது நற்செய்திப் பணியினை ஏற்கொள்ள வேண்டும். பண்பாட்டிற்குள் நுழைதல், வரலாற்றை உருவாக்குதல் ஆகிய இரண்டையும் மறந்துவிட்டால், தலத்திருஅவை தனது நற்செய்திப் பணியில் திறம்பட செயல்பட முடியாது என்றும், இவை இரண்டும் தனித்தனியாக இல்லை என்பதை உணர்ந்து வரலாற்றுடன் தொடர்ந்து இணைந்திருக்க, திருஅவையின் நற்செய்திப் பணியை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிகழ்வுகளை நாம் கண்டறிய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார் பேராயர் பிசிகெல்லா.




*நற்செய்தி அறிவித்தலை ஊக்குவிக்கும் திருப்பீடத்துறையின் தலைவர், பேராயர் ரீனோ பிசிகெல்லா*

புதிய பாதைகளைக் கண்டறியவும், தூயஆவியின் வத்திக்கான் செயல்பாட்டின் கீழ் அவற்றைப் பின்தொடரவும் நற்செய்தி அறிவிப்புப் பணிகள் நம்மைத் தூண்டுகின்றன என்றும், எல்லோராலும் எல்லா இடங்களிலும் எப்போதும் நம்பப்பட்டு வந்தது, வளர்ந்து வரும் புதிய கலாச்சாரத்தைப் புரிந்துகொள்வது போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார் பேராயர் பிசிகெல்லா.

உரையாடல், சந்திப்பு, மக்களிடையே கருத்து பரிமாற்றம், தகவல் மற்றும் அறிவைப் பெறுவதற்கான வாய்ப்பை இணையம் பிரதிபலிக்கிறது என்றும் பணி இல்லாமல், திருஅவை இல்லை என்பதை உணர்ந்து செயல்படவும் வலியுறுத்தியுள்ளார்.

# ’உடலின் இறையியல்‵ இந்த இறையியலுக்குப் பின்னால் உள்ள மறைபொருள் என்ன?

**கோலாலம்பூர்:** மேற்கண்ட இறையியலை யொட்டி விளக்கமளிக்கும் வகையில் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் மறைக்கல்வி பணிக்குழு கடந்த 2023 மே 4 மற்றும் 6 ஆம் தேதிகளில், இங்குள்ள நல்லாயன் பங்கில் உருவாக்கப்பயிற்சி யொன்றை நடத்தியது. இதில் அருள்தந்தை எட்வின் பீட்டர் அவர்களோடு மொத்தம் நாற்பது பேர் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சியின் முக்கிய பேச்சாளரான அழைக்கப்பட்ட திரு ஆண்ட்ரூ காங், 'மனித உடலின் உண்மையான அர்த்தத்தைக் கண்டறிதல்' என்ற தலைப்பில் உரையாற்றினார். இது உடலின் இறையியல் பற்றிய அடிப்படை அறிமுகத்தை அளித்தது.

இயேசு சிலுவையில் மரித்தபோது, அது கடவுளின் திருவுளத்திற்கு ஏற்ப, இயேசு மீட்பின் அன்பிற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒரு செயலாகும். இதன்வழி இயேசு மனிதனை கடவுளுடன் ஒன்றிக்கச் செயதார். இயேசுவை மணவாளனாகவும், திருஅவையைதம் மணமகளாகவும் கொண்டார். கடவுள், தனது தெய்வீக ஞானத்தில், மனிதனிடம் இந்த அன்பின் நிறைவு இருக்க வேண்டும் என்று படைப்பிலேயே இவ்வாறு வடிவமைத்தார்,



*பயிற்சியில் கலந்துகொண்டோரில் சிலர்*

அது மணவாட்டி அன்பாகவோ அல்லது துறவற அன்பாகவோ இருக்கலாம். திருமண அருளடையாளம் இந்த அன்பின் பகிர்வை ஒருவர் ஒருவருக்கான, இருவரும் ஓர் உடலாக ஏற்கும் கொடையாக அளிக்கிறது.

சகோதரர் கேப்ரியல், ஆண்ட்ரூ காங் குழுவினர் கடவுளுடன் இந்த அன்பின் ஒன்றிப்பை அடைவதற்கான வழியைப் பற்றி சிறிய ஆனால் மிக ஆழமான கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டதோடு, இறைவேண்டல் வழியாக கடவுளோடான அன்பின் ஒன்றிப்பில் ஒன்றிக்கச் செய்தார்.

*தொடர்ச்சி, அடுத்துப் பக்கம்....*

# விவாகரத்து, மறுமணம் புரிந்தோருக்கான திருஅவையின் புதிய படிப்பினை அறிக்கை தயாரிக்கப்படுகிறது

**வத்திக்கான்:** பொதுநிலையினர், குடும்பம் மற்றும் வாழ்க்கைக்கான வத்திக்கானின் பேராயம், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வேண்டுகோளின்படி விவாகரத்து செய்துகொண்ட மற்றும் மறுமணம் செய்து கொண்ட தம்பதிகளின் நலன்களைக் கவனிக்கும் ஆவணத்தை தயாரித்து வருகிறது என்று அதன் தலைவர் கார்டினல் கெவின் ஃபாரெல் கூறினார்.

கடந்த ஏப்ரல் 22 அன்று இத்தாலிய மொழியில் ஆற்றிய உரையில் ஃபாரெல் செயல்பாட்டில் உள்ள ஆவணத்தைப் பற்றி குறிப்பிட்டார். "எல்லா வகையான திருமண நெருக்கடிகளை அனுபவிப்பவர்களுக்கு" உதவி மற்றும் வழிகாட்டுதலை வழங்குவதன் முக்கியத்துவம் பற்றி ஃபாரல் பேசினார்.

'நீங்கள் விரும்பியபடி, திருத்ந்தையே- தோல்வியுற்ற திருமணம் மற்றும் மறுமணம் செய்து, புதிய வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்ளும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆவணத்தைத் தயாரிப்பதில் இந்த குடும்ப நலப் பணிக்கான ஆணையம் செயல்பட்டு வருகிறது" என்று ஃபாரெல் தனது அறிக்கையில் மேலும் விவரித்தார்.

இந்த ஆவணம் எப்போது வெளியிடப்படும் என்று ஃபாரல் தெரிவிக்கவில்லை.

கத்தோலிக்கர்கள் விவாகரத்து செய்து, முதல் திருமணத்தை ரத்து செய்யாமல் மறுமணம் செய்துகொள்வோர் புதிய குடும்ப வாழ்வை ஏற்கக் கூடாது என்று திருஅவை கற்பிக்கிறது, இது 2005 ஆம் ஆண்டு அப்போஸ்தலிக்க அறிவுரையான ஃபேமிலியாரிஸ் கன்சோர்டியோவில் (Familiaris Consortio) புனித ஜோன் போல் II அவர்களால் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. விவாகரத்து பெற்ற, மற்றும் மறுமணம் செய்து கொண்ட கத்தோலிக்கர்கள் நற்கருணையை அணுகுவது அவரவர் தனிப்பட்ட சூழ்நிலையைப் (case to case) பொறுத்ததாக இருக்கலாம் என்று திருத்தந்தை பிரான்சிஸ் தனது அப்போதலிக்க உரையில் தெளிவுப்படுத்தினார்.

சமீபத்திய நிகழ்ந்த நேர்க்காணல் ஒன்றில், விவாகரத்து பெற்ற, மற்றும் மறுமணம் செய்து கொண்ட கத்தோலிக்கர்கள் நற்கருணை பெறலாமா என்ற கேள்விக்குத் திருத்தந்தை பிரான்சிஸ் பதிலளித்தார்: "ஒருவரின் சூழ்நிலையை அறிந்திடாமல், நாம் கொண்டிருக்கும் விதிமுறையின் அடிப்படையில் எடைபோடவோ, கருத்துரைக்கவோ முடியாது." என்று பதலிளித்தார். நேர்க்காணலில், திருத்தந்தை பிரான்சிஸ், தனது முன்னோடியாக இருந்த மறைந்த திருத்தந்தை 16-ம் பெனடிக்ட், திருமணம் இரத்துச் செய்வதைப் பற்றி பகிர்ந்துள்ள கருத்துக்களை அலசிப்பார்க்க வேண்டுமாறு அறிவுறுத்தினார், "பெரும்பாலான திருஅவை திருமணங்கள் நம்பிக்கையின்மையால் செல்லாதக்கதாகின்றன" என்பதை உறுதிப் படுத்தினார்.

"இதைப் பற்றி யோசித்துப் பாருங்கள்: சில சமயங்களில் [ஒருவர்] திருமணத்திற்குச் செல்கிறார், அது ஒரு சமூகக் கொண்டாட்டமாக மட்டும் அமைகிறது. அதை ஓர் அருட்சாதனமாகப் பார்ப்பதில்லை. திருமணம் வெறும் சடங்கு அல்ல" என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார். திருமண வாக்குறுதியில் 'என்றென்றும்' என்று கூறும்போது, 'என்றென்றும்' என்பதை "இளைஞர்கள்" அதன் பொருளை எப்படி புரிந்துகொள்கின்றனர் என்று யாருக்குத் தெரியும்"- என்ற கேள்வியோடு நேர்க் காணலை நிறைவு செய்தார் திருத்தந்தை.

# உலக ஆயர் மாமன்றத்தில் துறவறத்தார், பொதுநிலையினர் பங்கேற்க அனுமதி

**வத்திக்கான்:** கடந்த ஏப்ரல் 26, புதனன்று, திருப்பீடம் வெளியிட்ட அறிக்கையொன்றில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆயரல்லாதவர்கள், அதாவது, அருள்பணியாளர்கள், திருத்தொண்டர்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் வரும் அக்டோபர் மாதத்தில் நடை பெறவிருக்கும் உலக ஆயர்கள் மாமன்றத்தில் வாக்களிக்கும் தகுதி பெறுகிறார்கள் என் அறிவித்துள்ளார் என்றார் இறையியல் பேராசிரியரான அருள்தந்தை Joseph Ho Thu.

நமதாண்டவர் இயேசு, சில பெண்களைத் திருத்தூதுப் பணிகளில் பங்கு கொள்ள அனுமதித்ததால், பெண்களுக்கு எதிராக எந்தப் பாகுபாடும் இல்லை என்பதை உறுதி செய்ய திருஅவை அதன் இயல்புக்குத் திரும்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார் இறையியல் பேராசிரியரான அருள்தந்தை Joseph Ho Thu.

இந்த மாற்றம் குறித்துக் கருத்துத் தெரிவித்த பிலிப்பீன்ஸ் கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் ஆயர் Pablo Virgilio S. David, ஆணாதிக்கம் நிறைந்த நிறுவனத்தில் இருந்து, விளிம்புநிலையை நோக்கிச் சென்றுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ் என்றும், இதன் வழியாக, விளிம்புநிலையில் உள்ளவர்களைத் தாங்களே முடிவெடுக்க அனுமத்துள்ளார் என்றும் புகழாரம் சூட்டியுள்ளார்.

உண்மையில் தான் இம்மாற்றத்தை எதிர்பார்த்ததாகவும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வுலக ஆயர் மாமன்றத்தில் பெண் துறவறத்தாரை மட்டுமன்றி,



*ஆசிய ஆயர்கள்*

பொதுநிலையினரையும் வாக்களிக்க அனுமதித்துள்ளார் என்றும் கூறினார். ஆயர் David

மேலும் திருத்தந்த பிரான்சிஸ் அவர்கள் இது ஒரு வித்தியாசமான ஆயர்கள் மாமன்றம் என்று தொடக்கத்திலிருந்தே தெளிவுபடுத்தினார் என்றும், இது ஆயர்களுக்கான மாமன்றம் மட்டுமல்ல, மாறாக, `ஒருங்கிணைந்த பயணம்' என்ற தலைப்பில் முழுத் திருஅவைக்குமான ஆயர்கள் மாமன்றம் என்றும் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

தனது நாட்டில், ஏற்கனவே நடைபெற்ற தேசிய மற்றும் கண்டங்கள் அளவிலான synod கூட்டத்தில் இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் பிரதிநிதிகளாக முழுமையாகப் பங்கேற்றுள்ளனர் என்றும் தெரிவித்தார் ஆயர் டேவிட். எனவே, இவ்வாண்டு நடைபெறவுள்ள சினோடல் பேரவையில் ஆயர்களோடு, அருள்பணியாளர்கள், திருத்தொண்டர்கள், இருபால் துறவியரும் பொதுநிலையினரும் கலந்த கொள்வது இறைவனின் அழைப்பாகும் என்றார்.

*முதல் பக்கத் தொடர்ச்சி.*

இப்பயிற்சியின்போது, ஆபாச படங்கள், ஒரே பாலின ஈர்ப்பு, கற்பு மற்றும் சுயக்கட்டுப்பாடு குறித்து பல கேள்விகள் எழுப்பப்பட்டன.

மேலும், உடலின் கண்ணியம் எப்பொழுதும் நிலைநாட்டப்பட்டு மதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. அதில் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளக்கூடாது. நாம் அனைவரும் கடவுளின் சாயலில் உருவாக்கப்பட்டுள்ளோம். எனவே கடவுளுடன் இந்த ஒன்றிப்பைத் தேடுவதன் மூலம் நம் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான பொறுப்பு நமக்குள்ளது எனும் ஆழ்ந்த கருத்தும் வெளிப்படுத்தப்பட்டது.

உடலின் இறையியல் கற்பித்தல் திருஅவையின் படிப்பினையில் படிப் படியாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்யப் பட்டது.

அமர்வின் நிறைவில், வருகைத்தந்த பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் அனைவரையும் சந்தித்து ஆசி வழங் கினார்.



## குடும்பம்

**கொடுத்து மகிழ்வதே குடும்பப் பண்பு**

**அன்பை, பண்பை,**
**பாசத்தை, துணிவை, மகிழ்வை,**
**மனநிறைவைக் கொடுத்து இன்பமாய்**
**வாழும் இடமே தலைசிறந்த குடும்பம்.**

# நமது சாட்சிய வாழ்வில் அவர் மாட்சியுறுகிறார்

இன்று பாஸ்கா காலத்தின் 7-ம் ஞாயிறுவில் இணைந்திருக்கிறோம். முதல் வாசகம் இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பிறகு, திருத்தூதர்கள் எருசலேமுக்குத் திரும்பி, அன்னை மரியா மற்றும் பிற பெண்களுடன் ஒரு மேல் அறையில் கூடினர். வாக்களிக்கப்பட்ட துணையாளரான தூய ஆவியாரின் வருகைக்காக காத்திருந்து இறைவேண்டலில் தங்களை முழுமையாக அர்ப்பணித்தார்கள் என்று அறிகிறோம்.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல், கிறிஸ்தவர்கள் தங்கள் துன்பங்களில் மகிழ்ச்சியைக் காண வேண்டும், ஏனெனில் அது கிறிஸ்துவின் சொந்த துன்பத்துடன் அவர்களை இணைத்து, இறுதியில் அவரது மாட்சியில் பங்குகொள்ள வழிவகுக்கிறது என்றும், கொடும் துன்பத்தில் உழன்றாலும் கிறிஸ்துவுக்காக தலை நிமிர்ந்து வாழ விசுவாசிகள் ஊக்கம் பெற வேண்டும் என்கிறார்.

நற்செய்தியில் காணப்படும் நான்கு முக்கிய கருத்துக்கள் பின்வருமாறு:

### நம்பிக்கையாளரின் ஒற்றுமை:

இந்த ஞாயிறு, இயேசுவும் தந்தையும் ஒன்றாக இருப்பதைப் போல, அவருடைய சீடர்களும் ஒன்றுபட வேண்டும் என்ற இயேசுவின் இறைவேண்டலால் ஈர்க்கப் படுகிறோம். இது கிறிஸ்தவர்களிடையே ஒற்றுமை மற்றும் அன்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

### சாட்சியமும் நற்செய்தியும் :

இன்றைய நற்செய்தி வாசகத்தில் இயேசு தம் சீடர்களுக்காக மன்றாடி, அவருடைய பணி மற்றும் போதனைகளை ஏற்று உலகில் சாட்சிகாளக வாழ பணிப்பதை எடுத்துரைக்கிறது. சாட்சிய வாழ்வே கிறிஸ்துவுக்கான உண்மை வாழ்வு என்பதை நினைவில் கொள்வோம்.

### தூய ஆவியாருக்காக காத்திருத்தல்:

கடந்த வியாழன் அன்று ஆண்டவரின் விண்ணேற்ற பெருவிழாவைக் கொண் டாடினோம். இந்த ஞாயிறு பெந்தெகொஸ்தே நாளில் தூய ஆவியாரின் வருகைக்காக தன் நம்பிக்கையாளர்களைத் திருஅவை தயார்படுத்துகிறது. தூய ஆவியாரின் வழிகாட்டுதலுக்காக காத்திருத்தலில் மன்றாடுவதில் கவனம் செலுத்த வேண்டும்.

### புதிய தொடக்கத்தைத் தழுவுதல்:

நம்பிக்கையான எதிர்காலத்தை நோக்கி முன்னேற, நாம் கடந்த காலத்தை விட்டுவிட்டு, நம்மைத் தடுத்து நிறுத்தும் எந்தச் சுமைகளையும் விட்டுவிட வேண்டும். நாம் ஒரு புதிய தொடக்கத்தைத் தொடங்கும்போது, மன்னிப்பு மற்றும் குணப்படுத்துதலைத் தேட வேண்டும். வாழ்க்கையில் நமது நோக்கம் மற்றும் பணியைப் பற்றி சிந்திக்கவும், கடவுளுடைய திருவுளத்தை தேடவும் நமது நேரத்தைச் செல்விடுதல் வேண்டும்.

தூய ஆவியானவருடனான ஒன்றிப்பில் நாம் இயேசுவுடனான உறவில் ஆழந்தும் நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் இருக்க வேண்டும். இயேசு இன்றும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் போலவே நம்மோடு உடன் இருக்கிறார். எனவே, தூய ஆவியானவர் உதவியோடு கடவுளின் வார்த்தையைப் படிக்கவும், நற்கருணை வழிபாட்டில், ஆராதனையில் பங்கேற்கவும், இயேசுவின் விண்ணக அருளை நம் மண்ணக வாழ்வில் நிறைவாக கண்டுணர, அவரது பணியினை தொடர்ந்து செய்ய, அவரது உடனிருப்பால், தீயசக்திகள், நோய், நொடிகளை வென்றிட வரம் கேட்டு திடம்பெறுவோம்.

ஆ. லூர்தம்மாள், காஜாங்.

### பாஸ்கா 7 ஆம் வாரம் - ஞாயிறு

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | திப 1: 12-14 |
| தி.பா | 27: 1, 4, 7-8 |
| 2 வாசகம் | 1 பேதரு 4: 13-16 |
| நற்செய்தி | யோவான் 17: 1-11a |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**